ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தொகுதி 16	ஜய, ஆவணி	பகுதி 8
Vol. 16	August 1954.	No. 8

		பக்கம்
அரசாங்கம் ஆலோசிக்குமா?	...	3
ஆஸவ கல்பம்	...	5
வைத்ய முறை எவ்விதம் அமையவேண்டும்?		13
ஸத்கார்யவாதம்	...	17
ஔஷதகுணம்—		
நவாயஸ வடி— நவமண்டூரவடி	...	23
பிருஹந்நவாயஸம்	...	24
காளமேக நவாயஸம்	...	25
பாலசிகித்ஸா—	...	26
செய்திகள்	...	29

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

மண்டல சம்பந்தமான எல்லாவித காரியங்களுக்கும் தலைவருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

தலைவர் T. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரி M. A., L. I. M.
23. சிங்காரிநாயக்கன் தெரு, மந்தை வெளி, மைலாப்பூர்,
மதராஸ்.—4.

சந்தா அனுப்பவும், மற்ற நிர்வாஹ விஷயங்களுக்கும் விலாஸம்:
பொதுக் கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்:
27, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சிறுப்பள்ளி.

பண்டிட் ஸ்ரீ. S. M. ஸௌந்தரராஜாசார்யர்,
ஆசிரியர்—"வைத்ய சந்த்ரிகா" ஸ்ரீரங்கம்.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுத வேண்டும்.

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

அரசாங்கம் ஆலோசிக்குமா ?

ஆயுர்வேத வைத்யர்கள் அதிகமாகக் கையாண்டுவரும் ஆஸவாரிஷ்டங்களின் மேல் அடிக்கடி அரசாங்கத்தின் த்ருஷ்டி விழுகிறது. ஆஸவத்திலுள்ள ப்ரூப்ஸ்ப்ரிட் 20°/o க்கு மேற்பட்டால் ப்ரூப்ஸ்பிரிட்காலன் ஒன்றுக்கு ரூபாய் முப்பத்தைந்து தீர்வை என விதித்தது ஒரு சமயம். இது சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமுலுக்கும் வந்தது.

ஆனால் வைத்யர்களின் ஒருமித்த கோரிக்கையின் மேல் கருணையுடன் கவனித்து "இது தகாது" எனத் தீர்மானித்து அந்த உத்தரவை வாபஸ் பெற்று ஷெட்யூலில் கண்ட பத்து வகையான ஆஸவாரிஷ்டங்களுக்கு மட்டில் காலனுக்கு பத்து ரூ. வீதம் வரி செலுத்தும்படி உத்தரவிட்டது.

இதுவும், கோட்டக்கல் ஆயுர்வேதசாலை நிர்வாஹத்தினர் கோர்ட்டில் தாவா செய்ததின் பலனாக இவ்விஷயம் மத்ய ஸர்க்கார் அதிகாரவரம்பிலடங்கியது என்றும், மாகாண ஸர்க்கார் அதிகாரவரம்புக்கப்பாற்பட்டது என்றும், ஆகவே சென்னை ஸர்க்கார் தீர்வை விதிப்பது சட்ட விரோதமெனத் தீர்ப்பளித்தது,

இதன்மேல் மாகாண ஸர்க்கார் வேறுவிதமாக தனது அதிகார வரம்பிற்குட்பட்ட வழியில் மறுபடியும் ரூபாய் முப்பத்

தைந்து தீர்வை செலுத்தவேண்டுமென உத்தரவிட்டிருக்கின்றனர்.

ஸாதாரணமாக நாம் கையாளும் நமது ஆஸவாரிஷ்டங்களில் 20% ப்ரூப்ஸ்பிரிட் இருப்பது மிக மிக அரிது. அப்படியே இருந்துவிட்டதாக வைத்துக் கொண்டாலும், அது எந்தக் காரணத்திற்காக இவ்வளவு நிர்ப்பந்தத்துக் குட்படுத்தப் படுகின்றதோ; அந்தக் கார்யத்துக்கும் பயன்படாது. இவை போதை அளிப்பனவல்ல.

இவை மருந்துகளாகவே உபயோகப்படுத்தப் படுகின்றனவாதலால் இதை அதிக அளவில் உட்கொள்ளவும் முடியாது.

இதை அமுலுக்குக் கொண்டு வருவதில் வைத்யர்கள் படும் சிரமமும் அதிகம்; நிர்வாஹத்துக்கும் அளவிறந்த சிரமம் ஏற்படும்.

முன்னமே தெரிவித்தபடி இருபது சதவிகிதத்துக்குமேல் ப்ரூப் ஸ்பிரிட் அம்சம் இவைகளில் இருக்கமுடியாதென்றாலும் பரீக்ஷையின் முடிவினாலேயே இந்த நிச்சயத்துக்கு வரவேண்டும். ஆகவே மாதிரியாக பரீக்ஷைக்கு அனுப்பப்பட்டுள்ள ஆஸவத்தில் சாராய அம்சவிகிதம் நிர்ணயிக்கப்படும் வரை அவ்விஷயத்தில் அனாவசியமாக ஏற்படும் கவலை ஒருபக்கம்; இவ்விகிதம் நிர்ணயித்து வருமுன் கையிலிருக்கும் சரக்குகள் செலவழிந்து, தீர்வையும் கொடுக்கவேண்டி வந்தால் அதை வசூலிக்க முடியாமற் போவது மற்றொரு பக்கம். உடனே இங்கே சாராயத்தின் சதவிகிதத் தன்மையை நிர்ணயிக்க வசதியில்லாமை. லாபரேடரியில் கொடுத்து ஒவ்வொரு ஸமயமும் தாரதரம் நிர்ணயிக்கவும் அவ்வப்போது ரூ. 10 வரை நேரிடும் நஷ்டம். இவ்வளவும் நிற்க, போலீஸ் நிர்வாஹத்தினர்களுடன் அன்றாடம் ஏற்படும் சிரமங்கள், பலவித கெடுபிடிகள் இவைகளெல்லாம் தினசரித் தொழிலில் அதிகம் பாதகம் விளைவிக்கும்.

ஆனால் இவ்வளவையும் ஒருபுறத்தில் அலக்ஷ்யம் செய்துவிட்டு அரசாங்கத்துக்காவது ஏதும் குறிப்பிடத்தக்க தொகை வசூலாகுமோ என்றால் அதுவும் இல்லை. தொகை வசூலாகாது என்பதுமட்டுமல்லாமல் நிர்வாஹத்தில் ஏற்படக்கூடும் சிரமமும் அளவற்றது.

இது விஷயமாக இன்னும் தெரிவிக்கவேண்டிய அவசியமான விஷயங்களைப் பின்னர் தெரிவிக்கிறோம்.

இவைகளை அரசாங்கம் ஆழ்ந்து ஆலோசித்து நிறுத்தி வைக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

ஆஸவ கல்பம்.

வைத்ய, எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.

ஔஷதங்களைப் பலவித உருவங்களில் தயாரிக்கும் முறை கல்பம் எனப்படும். கல்கம் கஷாயம் சூர்ணம் லேகியம் ஆஸவம் தைலம் கிருதம் பஸ்மம் சிந்தூரம் மாத்திரை கட்டு எனவாறு பலவித உருவங்களில் தேவைக்கேற்றபடி ஔஷதங்களைத் தயாரிக்கிறோம். இவை ஒவ்வொன்றும் ஒரு கல்பமே.

ஆஸவம் அரிஷ்டம் சீது வாருணீ ஸுரா மைரேயம் என அறு வகை ஆஸவ கல்பங்கள் கூறப்படுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மத்யம் என்ற பொதுப்பெயருமுண்டு. அதாவது மதம் அல்லது போதை தரவல்லது எனக் கருத்து.

ஆஸவம் அரிஷ்டம் என்ற முதல் இரண்டு கல்பங்களும் முக்கியமாக மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பெறும் ஔஷதகல்பங்களாகும். இதில் போதை தரும் மத்யத்தின் அம்சம் இருந்தபோதிலும் இவைகளை போதை தரும் மதுவாக உபயோகிக்கமுடிவதில்லை. போதை தரும் வகையில் இவைகளை உபயோகிக்கவேண்டுமானல் அதிகமான அளவில் உட்கொள்ளவேண்டும். அப்பொழுது அதில் உள்ள ஔஷதத்தன்மை, அதிக அளவில் ஔஷதத்தை உபயோகிப்பதால் ஏற்படும் கெடுதியை விளைவிக்கின்றது. அதனல் அபாயமில்லாத போதை தரும் பொருளாக ஆஸவாரிஷ்டங்களை உபயோகிக்கமுடியாது.

இவ்விரு கல்பங்களைத் தவிர மற்ற நான்கு கல்பங்களும் முக்கியமான போதை தரும் பானவகையாகும். இவைகளை ஔஷதமாக உபயோகிப்பது மிகச் சில சந்தர்ப்பங்களில் தான். அதனல் அவைகளை ஔஷதகல்பங்களாகக் கருதுவதில்லை.

மதுவருந்துவதை விலக்கத்தக்கதாகக் கருதும் ஆசாரக் குறிப்பாளர்களான மனு முதலிய ஸ்மிருதி நூலாசிரியர்களும் மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பெறும் கல்பங்களைத் தவிர மற்ற கல்பங்களைத்

தான் அருந்தத்தகாதவையென குறிப்பிட்டிருக்கின்றனர். போதை உண் டாக்கவே தயாரிக்கப்பெறும் மதுவகையை அருந்துவது கெடுதி விளை விக்கும் என்பதுதான் அவர்களின் கருத்து.

ஆஸவம் என்ற பொதுப் பெயரால் அந்த அறுவகை கல்பங்களும் குறிப்பிடப்பட்டிருப்பினும் ஔஷதகல்பங்கள் என்ற தொகுப்பில் ஔஷத மாக உபயோகிக்கத்தகுந்த ஆஸவம் அரிஷ்டம் என்ற இரு கல்பங் களே இங்கு இடம் பெறத் தகுதி பெறுகின்றன.

ஆஸவம் அரிஷ்டம் இவ்விரண்டு கல்பங்களும், ஆஸவம் என்ற ஒரே பெயரால் இங்கு குறிப்பிடப்படுகின்றன. சில பிராசீன நூலா சிரியர்கள் காய்ச்சப்பட்ட திரவத்தில் தயாரிக்கப்படும் மத்யம் அரிஷ் டம் எனவும், காய்ச்சப்படாமல் தயாரிக்கப்படுவது ஆஸவம் எனவும் பாகுபடுத்தித் தமது நூல்களில் அம்முறையிலேயே பெயரிட்டிருக்கிறார் கள். ஆனால் வேறு பல நூல்களில் இந்த பாகுபாடு அனுஸரிக்கப் படவில்லை. ஆஸவ முறைப்படி தயாராகிய கல்பத்திற்கு அரிஷ்டம் எனவும் அரிஷ்டமுறைப்படி தயாராகியதற்கு ஆஸவம் எனவும் பெய ரிடப்பட்டிருப்பது ஆங்காங்கு புலப்படுகின்றது. பல நூல்களிலுள்ள ஆஸவாரிஷ்டமுறைகளை ஒருங்கே தொகுத்து அமைக்கப்படும் இந் நூலில் அவ்வித வேற்றுமை அனுசரிக்கமுடியாதிருக்கின்றது. அத னால் ஆஸவகல்பத்தையும் அரிஷ்டகல்பத்தையும் ஆஸவகல்பம் என்ற ஒரே பெயராலேயே இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

மேலும் ஆஸவம் அரிஷ்டம் என்ற இரு சொற்களும் ஒரே கல் பத்தின் இருதன்மைகளைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளன. ஆஸவம் என்றால் திரவத்தில் இனிப்பு சேர்த்து மதுவாக்கும் முறை எனப் பொருள். அரிஷ்டம் என்றால் எக்காலும் கெடாதது எனப்பொருள்.

சாதாரணமாக கஷாயமாகவோ ஸ்வரஸமாகவோ ஆக்கப்பட்ட திரவம் இனிப்பு சேர்ந்தாலும் சேராவிட்டாலும் நாட்பட வைத்திருப் பின் குணம் மணம் நிறம் கெட்டு விஷத்தன்மை பெறுகின்றது. அதே திரவம் ஆஸவமாக்கப்பட்டால் அதன் குணம் மணம் நிறம் கெடா திருப்பதுடன், அதிலுள்ள ஔஷதத்தன்மையும் பரதுகாக்கப்பட்டு நீண்டகாலம் உபயோகிக்கத்தக்கதாக அமைகின்றது. இக்கல்பத்தினால் ஏற்படும் நன்மையை அரிஷ்டம் என்ற பெயரும், கல்பத்தின் ஸ்வரூ பத்தை ஆஸவம் என்ற பெயரும் தெளிவுபடுத்துகின்றன.

இவ்விரு கல்பங்களும் ஆஸவம் என்ற ஒரே தலைப்பில் கொடுக்கப் பட்டிருப்பினும் ஆங்காங்கு ஔஷதங்களின் பெயர்களை ஆஸவம் அரிஷ்டம் (தசமூலாரிஷ்டம் பிப்பல்யாஸவம் மதூகாஸவம்) என்ற வழக்கிலுள்ள பெயர்களுடனேயே கொடுத்திருக்கிறோம். அவைகளை வழக்கில் வந்த அந்தந்த பெயர்களுடன் குறிப்பிடுவதுதான் நல்லது.

ஆஸவம் என்றால் என்ன?

கஷாயம் ஸ்வரஸம் அல்லது ஜலம் இவைகளில் மருந்து சரக்குகளின் தூள் வெல்லம் சர்க்கரை தேன் முதலிய இனிய வஸ்துக்களைச் சேர்த்து அதில் மதுத்தன்மை ஏற்பட காட்டகத்திப்பூ கிண்வம் முதலியவை சேர்த்து மட்பானை, பீங்கான் ஜாடி, மரப்பீப்பாய் இவைகளில் ஒன்றில் போட்டு மூடி சீலை மண்செய்து சுத்தமான குளிர்ந்த இடத்தில் வைத்து ஒரு மாதம் கழித்துப் பிரித்து எடுத்து வடிகட்டி உடன் வேறுபாத்திரத்திலிட்டு காற்றுப்புகாதபடி மூடிவிடவேண்டும். இந்த செய்முறைக்கு ஆஸவகல்பம், ஆஸவஸந்தானம் (आसवसन्धानम्) எனப் பெயர்.

ஆஸவங்களின் செய்முறை ஔஷதகுணங்களின் பாதுகாப்பிலும் நீண்டகாலம் கெடாதிருப்பதிலும், மிகவும் உபகாரமளிக்க வல்லதாயிருப்பினும், மிகத் தேர்ச்சிபெற்ற அனுபவமுள்ள வைத்யனுக்கே நன்கு அமையும். செய்முறையின் பல நிலைமைகளில் ஏற்படும் தவறு சிறிதளவாயினும் ஆஸவத்தின் குணத்தையும் தன்மையையும் கெடுதலையச் செய்கின்றது. அதனால் ஆஸவங்களை நல்ல தேர்ச்சி பெற்ற வைத்யனின் மேற்பார்வையில் நல்லகவனத்துடன் தயாரிப்பது மிக அவசியமாகின்றது.

ஆஸவஸந்தானத்தில் ஏற்படும் தவறுகள்—

ஆஸவஸந்தானத்தின்போது ஏற்படும் தவறுகளே ஆஸவம் சரியாக அமையாததின் காரணமாவதால், அவைகளைப்பற்றி அறிந்துகொள்வது அவசியமாகின்றது, சாதாரணமாக ஆஸவம் தயார்செய்யும் வைத்யர்கள், ஆஸவம் ஒரு தடவை அமைவதைப்போல் மறுதடவை அமையாததை உணர்ந்திருப்பார்கள். ஆஸவம் ஒரு சமயம் தெளிந்து நல்ல நிறம் மணத்துடன் அமையும். ஒரு தடவையில் குழம்பி கலங்கி கனமான திரவமாக இருக்கும். இதை பாட்டில்களில் நிரப்பிவைத்தால் சில நாட்களில் அதில் ஒருவகை மாறுதல் ஏற்பட்டு, ஆஸவம் பொங்கி

வழிந்துவிடும். அல்லது மூடி திடமாக வைக்கப்பட்டிருந்தால் பாட்டில் உடைந்து சுக்குநூறாகிவிடும். சிலசமயம் வடிகட்டி வைக்க வைக்க மேல் பூஞ்சாணம் படிந்துகொண்டே இருக்கும். சிலசமயம் நிறம் மணம் மாறி புளித்துக் காடி போன்றாகிவிடும். சில சமயம் ஆஸவம் வெகு சீக்ரமாகவே தயாராகும். சில சமயம் பல மாதங்களாகியும் தெளியாமல் இருக்கும். இவ்விதக் கெடுதல்களுக்கு அனேகமாக ஸந்தானம் செய்யும் சமயத்தில் ஏற்படும் தவறுகளே காரணமாகின்றன. அதனால் ஒவ்வோர் நிலையிலும் கவனம் மிகத் தேவையாகின்றது.

ஒரு ஆஸவம் தயாராக கீழ்க்கண்ட சாதனங்கள் தேவையாகின்றன. 1. திரவம்—கஷாயமாகவோ ஸ்வரஸமாகவோ தயாரிக்கப்பட்டது. சில மருந்துகளில் சுத்த ஜலமே திரவமாக அமைகின்றது. 2. இனிப்பு-வெல்லம், சர்க்கரை, தேன் இம்மூன்றும் பிரதானமானவை. 3. பிரக்ஷேபசூர்ணம்—ஆஸவத்தில் நல்ல மணத்திற்கும் தீபனசக்திக்கும் பிரதான மூலிகையின் வீர்யத்தை அதிகப்படுத்துவதற்கும் சேர்க்கப்படுவது. 4. காட்டகத்திப்பூ- இதுதான் ஆஸவத்தின் மதுத்தன்மையை பாதுகாத்து வளர்க்கக்கூடியது. 5. கின்வம்— முதலில் தயாரித்த அதே ஆஸவத்தின் அடிவண்டல். ஆஸவம் சீக்ரமாக ஒரே மாதிரியாக அமைய உதவுவது. 6. பாத்திரம்— பானை நெய் பூசப்பட்டு புகை காட்டப்பட்டது; பீங்கான் ஜாடி; அல்லது மரப்பீப்பாய். 7. அதன் வாயில் கட்ட துணி. 8. அதன் வாயை மூட மூடி. 9 சீலை மண், 10. ஆஸவங்களை நிரப்ப பாட்டில் முதலியவை. 11. ஸந்தானம் செய்யும் இடம். இந்தப் பதினொரு விஷயங்களிலும் கவனம் மிக அதிகம் தேவை. இவைகளில் எவ்வாறு கவனம் செலுத்தவேண்டும் என்பதை கிரமமாகக் கவனிப்போம்.

1. திரவம்;

ஆஸவம் செய்யும்போது முதலில் அதில் சேர்க்கப்படும் மூலதிரவ்யங்களை நன்கு கவனிக்கவேண்டும். சாறாகப் பிழிந்தெடுக்கவேண்டிய கற்றாழை கரிசலாங்கண்ணி போன்றவைகளை அலம்பி சுத்தமாக்கி அதனுடன் சேர்ந்திருக்கும் மற்ற புல் பூண்டுகளை அகற்றவேண்டும். இடிக்க வேண்டியவைகளை மர உரல் அல்லது கல்லுரலில் மர உலக்கைகளால் இடித்து நல்ல வெண்மையான துணியில் வடிகட்டவேண்டும். வடிகட்டிய திரவத்தில் உடன் வெல்லத்தைச் சேர்த்துச் சிறிது சூடாக்கிப் பிறகு ஆறவைக்கவேண்டும். புளிப்பான சுவையுள்ள நெல்லிக்காய்ச் சாறு

பச்சை திராக்ஷைவகைகள் முதலியவைகளின் சாறு இவைகளைச் சிறிது சூடாக்கிக்கொள்வது ஆஸவத்தைக் காடியாக மாற்றுமல் காக்கும். சில ஆஸவங்கள் காடியாகவே மாறும் வகையில் யோகங்கள் கொடுக்கப்படுகின்றன. அவைகளில் உப்பு புளிப்பு சுவையுள்ளவை சேர்க்கப்படுகின்றன. மற்ற யோகங்களில் உப்பு புளிப்பு சுவையுள்ளவை சேர்க்கப்படுவதில்லை. புளிப்பான சுவையுள்ள சாறு முதலியவைகள் சேர்க்கப்படின் அவைகளைக் காய்ச்சினுல் அவை காடியாக மாறுமலிருக்கும்.

கஷாயமாகச் செய்துகொள்ளவேண்டிய சரக்குகளை நெல்லளவிற்கு மேற்படாத உருவில் நன்கு இடித்துக்கொள்ளவேண்டும். சூர்ணமாகச் செய்வதும் நல்லதல்ல. கஷாயம் தயாரிக்க ஈயம் பூசிய பித்தளை அல்லது தாம்ரபாத்திரம் உபயோகிக்கலாம். பாத்திரத்தில் கஷாயத்திற்காக உள்ள சூர்ணத்தைப்போட்டு அவை நனைந்து ஊறும் அளவிற்குள்ள ஜலத்தைவிட்டு நனைந்தபின் கஷாயம் எவ்வளவு மிகுதியாகவேண்டுமோ அவ்வளவுள்ள ஜலத்தைவிட்டு அதன் உயரத்தை அளவெடுத்துக்கொள்வது பிறகு கஷாயம் காய்ச்சும்போது கஷாயம் மிகுதியாக இருக்கவேண்டிய அளவை நிர்ணயிக்க உதவும். பிறகு கஷாயத்திற்குள்ள முழு ஜலத்தையும் விட்டு எரித்து அளவுப்படி மிகுதியான கஷாயத்தைத் துணியில் வடிகட்டிக்கொள்ளவேண்டும்.

கஷாயத்திற்காக உபயோகப்படுத்தும் தண்ணீர் சுத்தமானதாகவும் கைப்பு இல்லாததாயும் கிருமிகள் அழுகல் இல்லாததாயும் இனிய ருசி மணமுள்ளதாயுமிருக்கவேண்டும். கைப்புள்ள ஜலத்தில் தயாரிக்கப்படும் ஆஸவம் நன்கு அமைவதில்லை.

பிப்பல்யாஸவம் போன்ற சில ஆஸவங்களில் கஷாயமோ ஸ்வரஸமோ கிடையாது. சுத்த ஜலமே திரவமாகின்றது. சுத்த ஜலம் கூறுமிடத்தும் ஜலத்தை நன்கு கொதிக்கவைத்தே எடுத்துக்கொள்ளவேண்டும்.

சில நவீன ஆயுர்வேத மருந்து உற்பத்தியாளர்கள் ஆஸவத்திற்காக கஷாயம் செய்யும்போது இருவித யுக்திகளைக் கையாளுகிருர்கள். அவைகளும் கவனம் செலுத்தப்படவேண்டியவைகளே. கஷாயத்திற்காக உள்ள மருந்து சரக்குகளில் சில சூடாக்கப்படும்போது ஆவிமூலமாக சில சத்துக்களை இழந்துவிடுகின்றன. உதாரணமாக ஓமம், சந்தனம்,

ஜீரகம், சோம்பு, ஏலம், விலாமிச்சவேர் முதலியவைகளிலுள்ள எண்ணெய் அம்சம் கஷாயமாக எரிக்கும்போது ஆவிமூலமாக வெளிப்பட்டு விடுகின்றது. அவ்விதம் மாருத சில அம்சங்களே கஷாயங்களில் தங்குகின்றன. இவ்விதம் ஆவியாக மாறும் அம்சங்களைப் பிரித்தெடுப்பதற்கே தீநீர் (அர்க்கம்) முறைகளை கையாளுகிறோம். ஓமத்தீநீர், சந்தனத்தீநீர், ஏலத்தீநீர் முதலியவை இவ்வகையதே. அவ்விதம் ஆஸவத்திற்கான கஷாயத்திரவ்யங்களிலுள்ள சில நுண்ணிய அம்சங்கள் ஆவிமூலம் வெளியாவதைத் தடுத்து அதையும் கஷாயத்துடன் சேர்த்து விடுவதே நவீன மருந்து உற்பத்தியாளர்களின் நோக்கம்.

இம்முறை இருவகையாகப் பழக்கத்தில் உள்ளன. ஒன்று—கஷாயமாக்கவேண்டிய சாமான்களை அர்க்கயந்திரத்திலிட்டு தேவையான ஜலத்தை விட்டு மீதமாக வேண்டியதில் $\frac{1}{4}$-$\frac{1}{2}$ பாகம் வரை தீநீராக வடித்துக் கொண்டு, பாக்கி அர்க்கயந்திரத்திலுள்ள கஷாயத்தை வடிக்கட்டி இரண்டையும் ஒன்ருக்கிக்கொள்ளுதல். இரண்டாவது-கஷாயத்திரவ்யங்களை இடித்து வைத்துக் கொண்டு அதில் இரண்டுபங்கு அல்லது நான்கு பங்கு கொதிக்கும் வென்னீரை ஊற்றி மூடி ஒருநாள் ஊரவைத்தபின் கைகளால் கசக்கிப் பிறகு வடிக்கட்டிக் கொள்ளவும். இதில் ஆவியில் போகக்கூடிய சத்துகள் கிடைத்துவிடும். பாக்கி தேவையான திரவத்தை—கசக்கி எடுக்கப்பட்ட கஷாயத் திரவ்யத்திற்கு மிகுதியுள்ள முறைப்படி யுள்ள ஜலத்தை ஊற்றி தேறவேண்டிய அளவிற்கு கஷாயமாக்கி வடிகட்டிக் கொள்ளவேண்டும். ஊரல் கஷாயத்தையும் இக்கஷாயத்தையும் ஒன்ருக்கி யோகத்தில் சேர்க்க வேண்டும்.

முதன் முறையில் அர்க்கயந்திரம் தயாரிப்பது போன்ற செலவினம் அதிகம். இரண்டாவது சிக்கனமும் குணமளிப்பதுமானது. இம்முறைகளில் ஒன்றைக்கையாளுவது அவசியமே.

ஆஸவத்திற்கான கஷாயங்களில், திரவ்யத்திற்கு எத்தனை பங்கு ஜலம் சேர்த்து கஷாயமாக்கவேண்டும்? என்ற கேள்வி பிறக்கும். ஆஸவ யோகங்களைப் பரிசீலிக்குங்கால் நான்கு பங்கிலிருந்து முப்பத்திரண்டு பங்கு ஜலம் வரை சேர்க்கும்படி கூறப்பட்டுள்ளது. சில யோகங்களில் காணப்பட்ட அளவுப்படி ஜலம் சேர்த்துக் கஷாயமிட்டால் அதில் தயாரிக்கப் படும் ஆஸவம் பானகமாக இருக்குமே தவிர ஆஸவமாகாது. ஏனெனில் திரவ அளவிற்கு சமமோ முக்கால் பங்கோ அதற்கு மேலோ சர்க்கரையோ வெல்லமோ சேர்க்கும்போது தடித்த திரவம் தான் தயாராகும்.

அதிகமான இனிப்பு சேர்க்கப்படின் ஸந்தானம் ஆவதில்லை. ஜலத்தின் அளவு அதிகப்படினும் ஆஸவத்தின் நிறம் மணம் சுவை நன்கு அமைவதில்லை. அதனுல் சில யோகங்களில் நூல்களில் கூறப்பட்டுள்ளபடி கல்பங்களைச் செய்வது அனுபவத்தில் நல்ல பலன் தருவதில்லை. அந்நிலையில் யுக்தியையும் ஸாமான்ய பரிபாஷையையும் மனதிற் கொண்டு திரவம் இனிப்பு பிரக்ஷேப சூர்ணம் இவைகளின் அளவை நிச்சயிப்பது நல்லது.

ஒரு திரவ்யத்தைக் கஷாய மாக்குவது என்பது அதிலுள்ள மருந்து சத்து முழுவதும் திரவத்தில் இறங்கவேண்டியதற்காகவே. திராக்ஷை, பச்சை நெல்லிக்காய் ஆடாதோடை இலை போன்ற சில சரக்குகள் நான்கு அல்லது எட்டு பங்கு ஜலத்திலிட்டு நான்கில் ஒரு பங்கு ஜலம் மீதமாகக் காய்ச்சினுலே தனது ஸாரத்தை திரவத்தில் வெளியிட்டு விடுகின்றன. தசமூலம், சிற்றுமுட்டி, வில்வவேர் போன்ற சில திரவ்யங்கள் பதினுறு பங்கு ஜலத்தில் கஷாயமிட ஸாரத்தைத் திரவத்தில் விடுகின்றன. கற்றுழை போன்றவை சம அளவு ஜலத்திலேயே கஷாயமாகி விடுகின்றன. அதனுல் யுக்திக்கேற்ப எவ்வளவில் சத்துள்ள கஷாயம் தயாராகுமோ அவ்வளவில் ஜலம் சேர்த்துக் காய்ச்சுவது நல்லது. தசமூலாரிஷ்டம் போன்ற கஷாய திரவ்யங்கள் நிரம்ப உள்ள யோகங்களில் யோகத்தில் கூறியுள்ள ஜலத்தில் முக்கால் பங்கு ஜலத்தை முதலில் விட்டு நான்கில் ஒரு பங்கு கஷாயமாகச் செய்து பிறகு மீதமுள்ள கால் பங்கு ஜலத்தை விட்டு அதையும் முன்போல கஷாயமாக்குவதில் கஷாயத் திரவ்யங்களிலுள்ள எல்லா சத்தும் கஷாயத்தில் கிடைக்கும் என்பது அனுபவம். இதையெல்லாம் மனதிற்கொண்டே வாக்படர் **बह्वल्पपानीयग्राहितामौषधानामाकलय्य यावता मुक्तरसता, स्यात्तावदुदकमासेचयेच्छोषयेच्च । (अ. सं. कल्प. 8. अ.)** என்று திரவ்யங்களுக்கு எவ்வளவு ஜலம் தேவையோ, எவ்வளவு ஜலத்தில் திரவ்யத்திலுள்ள சத்து ஜலத்தில் கலந்து திரவ்யம் சத்தில்லாமல் போகுமோ, அவ்வளவு ஜலத்தை விட்டு கஷாயம் செய்ய வேண்டும் என உபதேசிக்கிருர்.

மேலும் அனேகமாக எல்லா ஆஸவ யோகங்களிலும் ஒரு துலாம் (400 தோலா) அளவுள்ள கஷாய திரவ்யங்களைக் கொண்டு கஷாயமிடும்படி கூறப்படுகின்றது. இவ்வளவில் தயாராகும் ஆஸவங்கள் சுமார் 10—12 படி அளவு இருக்கும். இதைக் காட்டிலும் குறைந்த அளவில் ஆஸவம் தயாரிக்கப்படவேண்டுமாகில், யோகத்தில் கூறப்பட்டுள்ள

ஜல அளவு போதாததாக இருக்கும். அங்கும் சாமான்ய பரிபாஷைப் படியும் யுக்தியை அனுசரித்தும் நடந்து கொள்ளவேண்டும்.

'நான்கு தோலாவிற்குட்பட்டு கஷாயதிரவ்யமிருந்தால் பதினாறு மடங்கும் அதற்குமேல் பதினாறு தோலாவிற்குள்ளிருந்தால் எட்டுமடங்கும் அதற்கு மேற்பட்டால் நான்கு பங்கும் ஜலம் சேர்க்கவும். கடின-மிருதுத் திரவ்யங்களுக்கேற்றவாறு ஜல அளவை இதிலும் மாற்றிக்கொள்ளவும்.' என்பதே பரிபாஷை, இதை மனதிற் கொண்டு யுக்தியுடன், குறைந்த அளவில் தயாராகும் **ஆஸவயோகங்களில்** ஜல அளவை நிர்த்தாரணம் செய்து கொள்வது நல்லது. (தொடரும்)

ஸ்ரீரங்கம் ஸ்ரீ லக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத தர்மவைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

ஷை வைத்யசாலையில் தினந்தோறும் காலை மணி 8-முதல் 10 வரையிலும் மாலை மணி 4-முதல் 5 வரையிலும் நோயாளிகளை நன்கு பரிசோதித்து சிறந்த ஆயுர்வேத மருந்துகள் இலவசமாக அளிக்கப்படுகிறது.

சென்ற மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

ஆண்கள்	1748	4646
பெண்கள்	1684	
சிறுவர்	1214	

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி,
B. A. B. L. அட்வகேட்.
ராயபாளையம் எஸ்டேட்.

பாரத ஆயுர்வேத சாலா

27. சின்னக்கடைத் தெரு. :: தெப்பக்குளம், திருச்சி.

எல்லாவித சாஸ்திரீயமான

— ஆயுர்வேத மருந்துகள். —

மிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்டவை.

வைத்யர்களுக்கு விசேஷ சலுகை உண்டு.

விபரத்திற்கு எழுதவும்.

வைத்ய முறை எவ்விதம் அமையவேண்டும்?*

வைத்யரத்ன பண்டிட் சிவசர்மா, பம்பாய்,
(அகிலபாரத ஆயுர்வேத மஹாஸம்மேளனத் தலைவர்.)

அசேதனப் பொருள்கள விஷயத்தில் விக்ஞானம் அடைந்திருக்கும் ஆச்சர்யகரமான முன்னேற்றம் சேதனப்பொருள்கள் விஷயத்தில் காணப்படவில்லை. ரஷ்யா வாஷிங்டன் நகரையோ, நியூயார்க் நகரையோ, சுலபமாக அழித்து விடுவது போன்றோ, அமெரிக்கா மாஸ்கோவையோ லெனின்கிராடையோ அழித்து விடுவது போன்றோ, அவ்விருவரும் உலகத்தையே அழித்துவிடுவது போன்றோ, சாதாரணமாக ஏற்படும் ஜலதோஷத்தை ஏற்படுத்தும் பூச்சியை அழிப்பதும், நரம்புக்கோளாறுள்ள மனிதனின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றச் செய்வதும் அவ்வளவு ஸுலபமல்ல.

அசேதனப் பொருள் விஷயமாக விக்ஞானம் கொண்டிருக்கும் கொள்கையும் கையாளும் முறைகளும் சேதனப் பொருள் விஷயத்தில் உபயோகமற்றவையே. உயிருடனிருப்பது என்பது அலகலகாகப்பிரித்து ஆராயுங்கால் மறைந்துவிடும் என கென்னத் வாக்கர் என்ற விக்ஞானி கூறியுள்ளது போல, குழப்பத்தை உண்டாக்க வரம்பற்ற சக்தியும் வாழ்க்கையைக் குலைக்கும் சாதனங்களில் தேர்ச்சியும் விக்ஞானிக்கு வாழ்க்கையை உண்டாக்கவும் குழப்பத்தை அகற்றவும் சக்தி அளிப்பதில்லை.

டாக்டர் அலெக்ஸிஸ் காரல் கூறியதுபோல வியாதிகள் நம் வசப்படவில்லை. அவைகள் தமது போக்கைச் சற்று மாற்றிக்

---

* சமீபத்தில் ஹைதராபாத்தில் நடந்த ஸர்வதேச ஆர்யர்கள் மஹாஸம்மேளனத்தில் ஆயுர்வேதம் ஆரோக்ய—ரோக நிவாரண விஷயங்களில் கையாளும் முறைகளைப்பற்றி மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அறிமுகப்படுத்தி ஸ்ரீ சர்மா அவர்கள் பேசியதன் ஸாரம்.

கொண்டிருக்கின்றன. நவீன வைத்ய விக்ஞானிகள் தொத்து நோய்களை க்ஷய வியாதிகளாக மாற்றிவிட்டார்கள். காலராவிற்கும் வைசூரிக்கும் பதிலாக ஹ்ருதயபலவீனம், திடீரென ஹ்ருதயம் நின்றுபோதல், மூத்திரக்குண்டிக்காய்களின் பலவீனம், வயிற்றுப்புண் முதலியவை பயங்கரமான அளவில் தற்சமயம் உயிர்களைக் குடித்துக் கொண்டிருக்கின்றன.

விக்ஞானத்தினல் பெரிய வெற்றியென புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல ஆராய்ச்சி முடிவுகள் காலத்தின் தேர்வில் நிலைக்க முடியாமல் பின் வாங்குகின்றன. வியாதியின் காரணமான பூச்சிகளின் பலம் பெருகி சிகித்ஸைக்கு அடங்காதிருப்பதும். பல அபாயகரமான விஷசக்தி பெற்ற மருந்துகளை வியாதிஸ்தன் அருந்தி அருந்தி சரீரம் முழுவதும் விஷமாக்கப்பட்டிருப்பதுமான அபாயங்கள் தினமும் வளர்ந்து கொண்டே யிருக்கின்றன. அவ்வித விஷ சக்தி பெற்ற ஔஷதங்களை நிறுத்துவதே சிறந்த ஆரோக்கியம் பெற சாதனமாகும்.

பூச்சிகள் எவ்விதம் விஷமான மருந்துகளால் கூட மாளாமல் எதிர்த்து வளர்கின்றனவோ அவ்விதம் சரீரமும் எவ்வித கெட்ட பூச்சிகளையும் எதிர்த்து நிற்கமுடியும். எதிர்ப்பு சக்தியும், சூழ்நிலைக்கேற்றவாறு எதிர்க்கும் சக்திகளுக்கெதிரே தன்னை பலப்படுத்திக் கொள்வதும் பூச்சிக்கும் சரீரத்திற்கும் பொதுவே.

சரீரம் முழுவதையும் ஒன்ருகப் பார்த்து வியாதிக்குப் பரிகாரம் தேடுவதே அடிப்படையாக ஸ்திரமான ஆரோக்யத்தை நிறுவ உதவும். வியாதிஸ்தனை, ஹ்ருதயம், கல்லீரல், மூத்திராசயம், கிரந்தி அல்லது பூச்சி என்றவாறு தனித்தனியாக கூறுபோட்டு அலசுவதால் உண்மையான ஆரோக்யம் கிட்டாது.

மனிதனின் சராசரி ஆயுள் நீடிப்பைப் பற்றி வெளிவரும் புள்ளி விபரங்கள் உண்மையான ஆரோக்ய நிலையை மறைத்தே வெளிவருகின்றன. உயர்ந்தரக வைத்ய வசதி பெறத் தகுந்த பொருள் வசதி பெற்றவருக்கு ஒருக்கால் சராசரி ஆயுள் நீடிக்கப் பட்டிருக்கலாம். பொருள் வசதிக் குறைவானவர்களுக்கு சராசரி ஆயுள் வரவரக் குறைந்து கொண்டே வருகின்றது. டாக்டர் அலெக்ஸிஸ் காரல் கூறுவது போல, தற்சமயம் உச்சஸ்தாயி

லுள்ள சிறந்த தேகக் கட்டுவாய்ந்த மல்லர்கள் கூட அவர்களின் முன்னோர்களை விட நரம்பு பலவீனம் உள்ளவர்களாகவும் ஆத்ம பலம் குன்றியவர்களாகவும் தான் காணப்படுகிறார்கள்.

ஆயுர்வேதத்தை ஊன்றிப் படித்தால் ஆயுர்வேதம் ஒரு வைத்யமுறை மட்டுமல்ல; ஆனால் வாழ்க்கையில் ஸ்திரமான ஆரோக்யத்தையும் நீண்ட ஆயுளையும், மனோநிலை ஆத்ம நிலை உயர்வையும் பெறுவதையே லக்ஷ்யமாக உள்ள ஓர் அரிய கலை என்பது தெளிவாகும்.

தேசீய கலைகளையும் விக்ஞானங்களையும் பற்றிய அரைகுறையான அறிவினால் ஏற்பட்ட அறிவு அடிமைத்தனமும், மிகவும் மட்ட ரகமானதும், ஆனால் பகட்டாக விளம்பரப்படுத்தப்படுவதுமான வெளிநாட்டு முறைகளை புத்தியில்லாமல் பெருமைப் படுத்தி அவைகளை அப்படியே பின்பற்றுவதும் சேர்ந்து, பாரதத்தின் ஆரோக்ய இலாகா மந்திரியை கிராமங்களுக்குப் பெரிதும் பாதகம் விளைவிக்கக் கூடியதும், தொழிலாளிகளின் நலனுக்கு பாதகமானதுமான சில திட்டங்களை கையாளச் செய்திருக்கின்றன.

கல்விமானான ஒவ்வொரு இந்தியனும், இரு வருஷப் பயிற்சிக்குப் பின்னர் வைத்ய உதவியாளர் (Auxillary personnal) என்ற பெயரில் வெளிவரவிருக்கும் அலோபதி வைத்யர்களின் உண்மை நிலையை அறிந்திருப்பது கடமையாகும். சென்னை முதலிய ராஜ்யங்களின் சர்க்கார்களின் அறிக்கையைப் பார்க்கில், ராஜ்ய ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான டாக்டர்கள் கிடைக்காதிருப்பதாலும் இன்னம் 50 வருஷங்களுக்கு கிராமங்களுக்கு வைத்ய உதவி அளிக்கப் பூர்ணமாக டாக்டர்கள் கிடைக்கமாட்டார்கள் என்பதாலும், இரண்டு வருஷ வைத்யப் பயிற்சி பெற்ற மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிய ஒருவன் டாக்டராக விளங்கப் போவதும், அவன் ஸல்பா மருந்துகள் பார்பிட்யூரேட்ஸ் போன்றவை ஆண்டிபயாடிக்ஸ் மருந்துகள் போன்ற விஷ மருந்துகளைக் கையாண்டு கிராமமக்களின் ஆரோக்யச் சீரழிப்பிற்குக் காரணமாகப் போவதையும் நன்கு உணர முடியும். அதனால் தினசர்யை, ருதுசர்யை, யோகப் பயிற்சிகள், ஆரோக்ய வாழ்விற்கேற்ற ஆகார நடத்தை முறைகள், தேகக் கூறுக்கு சற்றேனும் கெடுதல்

விளைவிக்காத ஆயுர்வேத ஔஷத உபயோகங்கள் இவைகளைப் பற்றி ஜனங்களிடையே பிரசாரம் செய்வது மிகவும் அவசியமாகின்றது.

தேசத்தின் உட்புறமெல்லாம் ஊடுருவி ஆங்காங்குள்ள கிராம வைத்யர்களுக்குள்ள வைத்ய அறிவை மேலும் வளர்த்து, கிராம மக்களுக்கும் ஆரோக்ய வழிகளைப் புகட்ட ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு சுற்றுப் பிரயாணம் செய்யும் வைத்யக் குழு அமைக்கப்படவேண்டும். புதிய மேனாட்டு முறைகளால் பல் ஊத்தை, பொய்ப் பல், நரம்புத் தளர்ச்சி போன்ற பல கொடிய நோய்களால் வாடும் மேனாட்டினருக்குப் பொறாமை ஏற்படும் வகையில் ஆரோக்ய பிரசாரமும், ஜனங்களை ஆரோக்ய வாழ்வு வாழச் செய்வதும் மிக அவசியம். மேனாட்டின் பகட்டில் ஏற்பட்ட மோகத்தில் நமது மக்களையும் அவர்களது அல்ல வாழ்வைப் பின்பற்றச் செய்வது கொடூரமான செயலாகும்.

திருச்சி

ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்

17, சின்னக்கடைத் தெரு,
தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி,

வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த
விலைக்கு சப்ளை செய்யப்படும்.
விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

ஸ்ரீ:

ஸத்கார்யவாதம்.

(G. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தஞ்சாவூர்.)

மற்ற சாஸ்த்ரகாரர்களைப் போலவே, ஆயுர்வேத கர்த்தாக்களாகிய மஹரிஷிகளும் ப்ராணி வர்க்கங்களுடைய ஐஹிக க்ஷேமத்தையும் ஆமுஷ்மிகமான பரம புருஷார்த்தத்தையும் பெறும் வழியை அழகாக உரைத்துள்ளனர். அதனால் மற்ற சாஸ்த்ர காரர்களோடு சில குறிப்பிட்ட விஷயங்களில் அபிப்பிராய வேறுபாடு—ஒற்றுமைகள் ஆயுர்வேதிகளுக்குத் தவிர்க்க முடியாததாகி விட்டது இயல்பேயாகும். தங்களுக்கு விரோதமான கொள்கைகளைத் தகுந்த யுக்திகளால் நிராகரித்து ஆயுர்வேத காரர்கள் தங்களுடைய மதத்தை ஸ்தாபித்தனர். சில விஷயங்களைப் பரக்கப் பேசாமல் விட்டுச் சென்றிருப்பது अनुक्तं अन्यतो ग्राह्यं என்கிறபடி மற்ற ஸித்தாந்தங்களில் குறிப்பிட்ட விஷயங்களை இவர்களும் அங்கீகரிப்பதற்காகவே என்று நாம் கொள்ளவேண்டும். அதில் உபநிஷத்துக்களில் வகுக்கப்படும் கொள்கைகளையே முக்கியமாக மேற்கொண்டுள்ளனர்.

உபநிஷத்துக்களில் ऐतदात्म्यमिदं सर्वं- सर्वं खल्विदं ब्रह्म என்பது போன்ற பல வாக்கியங்கள் ஜகத்தும், ப்ரஹ்மமும் ஒன்றே என்கின்றன. यतो वा इमानि भूतानि जायन्ते-तदैक्षत बहु स्यां प्रजायेय என்பது போன்ற வாக்கியங்கள் "மேற் சொன்ன அபேதம், ஜகத்தும் ப்ரஹ்மமும் கார்ய காரணங்களாக இருப்பதினால் வந்தது" என்பதை விவரிக்கிறது. சாந்தோக்யத்தில் ஸத்வித்யையில் மிருத்பிண்ட த்ருஷ்டாந்தத்தினால் கார்ய காரணங்களுக்கு அபேதமும், ஸத்கார்ய வாதமும் உறுதிப் படுத்தப் பட்டுள்ளது. இதுவே ஆயுர்வேதக் கொள்கையுமாகும்.

பல சாஸ்திரங்களை நன்ருகக் கற்றறிந்தால்தான் ஆயுர் வேத சாஸ்திரத்திலும் தெளிவான ஞானம் உண்டாகும். ஸுச்ருத ஸம்ஹிதை, ஸூத்ர ஸ்தானம், 4-வது அத்தியாயம், 7-வது ச்லோகம் பின்வருமாறு—

"एकं शास्त्रमधीयानो न विद्याच्छास्त्रनिश्चयम् ।
तस्माद्बहुश्रुतः शास्त्रं विजानीयाच्चिकित्सकः ॥"
अन्य शास्त्रोपपन्नानां चार्थानामिहोपनीतानाम्......

—என்கிற வாக்யத்திற்கு ஆதாரமாக இந்த ச்லோகம் தோன்றியது. இதிலிருந்து ஆயுர்வேதத்தில் விவரிக்கப் படும் கருத்துக்களை நன்கு உணர்வதற்கு மற்ற சாஸ்திரங்கள் இன்றியமையாதன வென்பது புலனுகிறது.

இன்னும் ஸுச்ருதத்தில் சொல்லியிருக்கும் "**भौतिकानि चेन्द्रियाण्यायुर्वेदे वर्ण्यन्ते**" என்கிற வாக்யத்தை எடுத்துக்கொள்வோம். "இந்திரியங்கள் பௌதிகங்கள்" என்று ப்ரதிக்ஞையாகச் சொல்லப்படாமல் "ஆயுர்வேதத்தில் பௌதிகங்களாகச் சொல்லப்படுகின்றன" என்று கூறும் இந்த வாக்யம் மிகவும் அர்த்த புஷ்டி உள்ளது. இந்திரியங்கள் ஆஹங்காரிகம் என்பது ச்ருதி ப்ரஸித்தமாதலால் அதை யாராலும் மறுக்கமுடியாது என்னும் அபிப்பிராயம் இந்த வாக்யத்தில் த்வனிக்கிறது. அதனுல்தான் "**आयुर्वेदे वर्ण्यन्ते**" என்கிருர். ஆஹங்காரிகங்களாக இருந்தும் அதை உண்மைக்குப் புறம்பாக பௌதிகங்கள் என்று ஏன் சொல்லவேண்டும் என்கிற கேள்விக்கு பதில் மிக எளிது. இவர்களுடைய சிகிச்சை முறைகள் பௌதிகங்களிலேயே செல்லும் என்பது தான் அது. (இந்திரியங்களுக்கு சிகிச்சை செய்யும்போது அவைகளுக்கு ஆச்ரயமாகி, ஆப்யாயனம் செய்துகொண்டிருக்கிற பஞ்சபூதங்களிலேயே வைத்யன் தன் பேஷஜங்களுடைய சக்தியை செலுத்த முடியும்.)

இப்படியாக ஆயுர்வேதத்திலுள்ள வாக்கியங்களுக்கு இதர சாஸ்திரங்களைக் கொண்டு சரியான அர்த்தத்தை அறிந்து கொள்ள முயலவேண்டும்.

இனி முக்கியமான விஷயத்தைக் கவனிப்போம். நையாயிகர்கள், வைசேஷிகர்கள் ஆகியோர் உபாதானமும், உபாதேயமும் அத்யந்தபின்னங்கள்-அதாவது அவைகள் ஸ்வரூபத்திலேயே வெவ்வேறான பொருள்கள்-என்று கூறுகின்றனர். அவ்வாறாயின் உபாதானம் இருக்கும்போது உபாதேயம் இல்லாமலிருப்பதையும், பிறகு புதிதாக உண்டாவதையும் அவச்யமாக அங்கீகரிக்க வேண்டியிருப்பதால் அவர்கள் அஸத்கார்யவாதத்தை அங்கீகரிக்கவேண்டியிருக்கிறது. அஸத்கார்ய வாதம் என்றால் கார்யமானது ஏற்கெனவே இல்லாமல் புதிதாக உண்டாகிறது என்று பொருள். இதற்கேற்ப ' कार्यनियतपूर्ववृत्ति कारणम् " என்றும் "कार्यं प्रागभावप्रतियोगि" என்றும் காரண, கார்யலக்ஷணங்களை அவர்கள் வகுத்துள்ளனர். அதாவது கார்யம் உண்டாவதற்குமுன்பு தவறாமல் இருப்பது காரணமாகும் என்பது காரணலக்ஷணம். இதனால் காரணம் கார்யத்தைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டதென்பது புலனாகின்றது. ப்ராகபாவத்திற்கு ப்ரதியோகியாய் இருப்பது கார்யம் என்பது கார்யலக்ஷணம். அதாவது ஒரு குறிப்பிட்ட சமயத்தில் இல்லாமலிருக்கும் ஒரு பொருள் சற்று நேரம் கழித்து உண்டாகப் போகிறது. அங்கிலையில் உள்ள அபாவத்தை ப்ராகபாவம் என்பர். அதற்கு ப்ரதியோகி கார்யம். இவ்விதம் கூறுவதினால் கார்யம் முன்பு இல்லாமல் புதிதாக உண்டாகிறது என்பது தெளிவு. இதற்கு இரண்டு உதாஹரணங்களைக் கொடுக்கிறேன். மண்ணிலிருந்து குடம் உண்டாகிறது, நையாயிகர்களுடையவும் வைசேஷிகர்களுடையவும் பக்ஷம் மண் வேறு, குடம் வேறு என்பது. மண் காரணம், குடம் கார்யம். குடத்தால் செய்யும் கார்யத்தை மண்ணால் செய்யமுடியாது. அவர்களின் பக்ஷம் காரணம் வேறு, கார்யம் வேறு என்பதே. நூலிலிருந்து துணி உண்டாகிறது. நூல் காரணம், துணி கார்யம். துணியால் செய்யும் கார்யத்தை நூலால் செய்யமுடியாது. ஆகையால் கார்யகாரணங்கள் பின்னம் என்பது அவர்களின் ஸித்தாந்தம்.

மேற்சொன்ன அஸத் கார்ய வாதத்தை ஸாங்கியர்கள், வேதாந்திகள், ஆயுர்வேதிகள்—ஆகியோர் ஒப்புக்கொள்வதில்லை. காரணம் என்ன வெனில்; அஸத்கார்ய வாதம் உண்மைக்குப் புறம்பானது என்பதே. இவ்விஷயத்தை,

"असदकरणादुपादानग्रहणात्सर्वसम्भवाभावात् ।
शक्तस्य शक्यकरणात् कारणभावाच्च सत्कार्यम् ॥"

என்னும் காரிகையினுல் ஈச்வர் கிருஷ்ணர் தெளிவுபடுத்தி உள்ளார்.

असदकरणात्- முன்பு இல்லாததை உண்டுபண்ண முடியாது. மணலிலிருந்து எண்ணெய் எடுக்கமுடியாது. காரணம் மணலில் எண்ணெய் கிடையாது என்பதுதான்.

उपादानग्रहणात्- எண்ணெய் வேண்டுவோர் எள்ளையே தேடுகின்றனர். தயிர் வேண்டுவோர் பாலையே தேடுகின்றனர். காரணம் எள்ளில் எண்ணெய் இருக்கிறது. பாலில் தயிர் இருக்கிறது என்பது தான்.

सर्वसम्भवाभावात्- காரணத்திலிருந்து கார்யம் புதிதாகவே உண்டாவதாயிருந்தால் எந்தக் காரணத்திலிருந்தும் எல்லாக் கார்யங்களும் உண்டாகலாம். அதாவது வெள்ளியிலிருந்து பொன் உண்டாகலாம். ஜலத்திலிருந்து தயிர் உண்டாகலாம். மண்ணிலிருந்து துணி உண்டாகலாம். நூலிலிருந்து குடம் உண்டாகலாம். அவ்வாறு ஏற்படுவதில்லை.

शक्तस्य शक्यकरणात्- குடத்தைப்பண்ணும் வகையறிந்த குயவனுக்கு மண்ணைக் கொண்டே அதைச் செய்யமுடிகிறது. நூலைக் கொண்டு செய்ய முடிவதில்லை. இவ்வாறே துணியை உற்பத்தி செய்வதில் தேர்ச்சி பெற்ற ஒருவன் நூலிலிருந்து தான் துணியைச் செய்யமுடிகிறது. மண்ணிலிருந்து செய்ய முடிவதில்லை.

कारणभावाच्च सत्कार्यम्-குடத்தில் அதன் காரணமான மண்ணின் தன்மையையும், துணியில் அதன் காரணமான நூலின் தன்மையையும் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். அதனுல் மண்ணே குடமாக நிற்கிறது. நூலே துணியாக மாறி இருக்கிறது என்பது உறுதியாகின்றது. மேற்கூறிய காரணங்களால் கார்யம் புதிதாக உண்டாவதில்லே. ஏற்கெனவே அவ்யக்தமாக இருப்பது பிறகு வ்யக்தமாகிறது என்பது ஸாங்கியர்களின் கொள்கை.

மேற்கூறிய யுக்திகளினுல் நையாயிகர்களின் அஸத்கார்ய வாதத்தை திறமையுடன் கண்டித்து ஸத்கார்ய வாதத்தை ஸாங்கியர்கள் ஸ்தாபித்துள்ளார்கள். இதில் சில குறைபாடுகள் உள்ளன. இதை "सन्ति प्रागप्यवस्थाः सदितर (जनना)...... (தத்வமுக்தாகலாபம்- ஜடத்ரவ்ய ஸரம்-24-வது ச்லோகம்) வ்யாக்யானத்தில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் அழகாக நிரூபித்துள்ளார். ஸாங்கியர்களின் ஸத்கார்ய வாதம் காரணத்தில் கார்யம் அனபிவ்யக்தமாக இருந்து பிறகு ஸாமக்ரிகளின் சேர்க்கையினுல், வ்யக்தமாகிறது என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இது தவறு. மண்ணில் (காரணத்தில்) குடம் (கார்யம்) இல்லே. இருந்தால்தெரியுமல்லவா? குடத்திஞல் செய்யும் கார்யங்களே மண்ணிஞல் செய்ய முடியவில்லே. மண்ணில் குடம் இருப்பது வாஸ்தவமாஞல் குடத்திஞல் செய்யும் கார்யத்தை மண்ணிஞலேயே செய்து கொள்ளலாமல்லவா? ஆதலின் ஸத்கார்யவாதத்தை ஸாங்கியர்கள் கூறும் வழியில் ஸ்தாபிப்பது ஸாத்யமில்லே. (இது போன்ற பல காரணங்களேயும் ஸாங்கியர்களின் யுக்திக்கு கண்டனங்களேயும் மேற்கூறிய தத்வமுக்தாகலாப ச்லோக வ்யாக்யானத்திலும் ஸ்ரீபாஷ்யம் ஆரம்பணுதிகரணத்திலும் காணலாம். ஆதலின் ஸத்கார்யவாதத்தை வேறு வழியில் ஸ்தாபிக்க வேண்டும். அதுதான் அவஸ்தா பேதத்தை அவலம்பித்து ஸ்தாபிக்கும் வழி.

அவஸ்தா என்பது நிலேமை (आगन्तुक धर्मः) எனப்படும். ஒரே மண் ஒரு அமைப்பில் குடமாகவும், மற்

ெருரு அமைப்பில் ஜாடியாகவும் காணப்படுகிறது. மண் என்பது ஒரு நிலைமை. ஜாடி என்பது அதே பொருளின் வேறு நிலைமை. குடம் என்பதும் அதே பொருளின் மற்றொரு நிலைமை. ஆக மண், குடம், ஜாடி இம்மூன்று சொற்களும் ஒரே பொருளின் வெவ்வேறு நிலைமைகளைப் பற்றி வருகின்றன. நிலைமைகள் மாறுபடுவதினாலேயே பெயர்களும் கார்யங்களும் மாறுபடுகின்றன. பொருள் ஒன்றுதான். ஆதலினாலேயே கார்யமும் காரணமும் ஒன்றே என்றும் கார்யம், என்பது புதிதாக உண்டாவதில்லை என்பதும் வேதாந்திகளால் ஏற்கப்பட்டது. இப்பொழுது சொல்லப்பட்ட ஸத்கார்யவாதமே ஸகல ப்ரமாணங்களிலும் கூறப்பட்டுள்ளது.

अन्यदुप्तं जातमन्यदित्येतन्नोपपद्यते ।
उप्यते यद्धि यद्बीजं तत्तदेव प्ररोहति ॥

(மனுஸ்மிருதி— 9-வது அத்யாயம்)

'வீரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்காது' என்னும் பழமொழி இந்த ச்லோகத்தின் கருத்தையே ப்ரதிபலிக்கிறது. இதனால் ஒரு குறிப்பிட்ட விதைதான் குறிப்பிட்ட செடியாக மாறுகிறது. அதாவது அவரை விதையிலிருந்து அவரைச் செடி தான் உண்டாகும். காரணாவஸ்தையில் விதை என்னும் பெயரும், அதற்கே கார்யாவஸ்தையில் செடி என்னும் பெயரும் வழங்கப் படுகின்றன. அவ்வளவே யன்றி பொருளில் வேறுபாடு இல்லை.

(தொடரும்.)

ஆயுர்வேத லக்ஷணம்.

நன்மை தீமைகளும், ஸுக துக்கங்களும், ஆயுளும், அதின் நன்மை தீமைகளும், அளவும் எதில் சொல்லப்படுகிறதோ; அது "ஆயுர்வேதம்" எனச் சொல்லப்படுகிறது.

ஔஷத குணம்:

நவாயஸ வடி—நவமண்டூரவடி

ரக்தக் குறைவிலும் ஆகாரசத்து சரீரத்தினுள் சேர்ந்து தாதுகளின் விருத்திக்குக் காரணமாவதைத் தடைசெய்யும் நோய் பலவற்றிலும் இரும்பு பஸ்மமாகவோ தனியாக சுத்தி செய்யப் பட்டோ சில சூர்ணங்களுடன் மருந்தாக உபயோகப்படுத்தப்படு கின்றது. இந்த லோஹ யோகங்களில் அதிகமாக உபயோகத்தி லுள்ளவை நவாயஸமும் நவமண்டூரமும். எல்லா பிரஸித்த நூல் களிலும் அனேகமாக இம்முறை காணப்படுகின்றது.

சுக்கு திப்பிலி மிளகு கடுக்காய்த் தோல் தான்றிக்காய்த் தோல் நெல்லி முள்ளி (விதை நீக்கியது) கோரைக்கிழங்கு, வாய் விடங்கம், கொடிவேலி வேர்ப்பட்டை இவை வகைக்கு சமனெடை சேர்த்து இடித்து துணியில் வடிகட்டிய சூர்ணத்திற்கு சமனெடை அயஸ்ஸிந்தூரம் அல்லது மண்டூரபஸ்மம் சேர்த்து 3 நாள் கல் வத்திலிட்டு சந்தனுத்யர்க்கம், திரிபலா கஷாயம், மூக்கரட்டை கஷாயம் மருதம்பட்டை கஷாயம் இவைகளில் ஒரு திரவம் விட் டரைத்து 4–6 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். அயஸ்ஸிந்தூரம் சேர்த்தற்கு நவாயஸமெனவும் மண்டூரபஸ்மம் சேர்த்ததற்கு நவமண்டூரம் எனவும் பெயர். நவமண்டூரத்தை நவாயஸ மண்டூரம் என்பர் சிலர்.

இதில் சேர்க்கப்படும் இரும்பு பஸ்மமாக சேர்க்கப்படவேண் டுமா அல்லது சுத்தமான அயத்தைச் சேர்த்தால் போதுமா என்பதில் அபிப்பிராய பேத முண்டு. வீக்கம், மண்ணீரல் கல்லீ ரல் பெருக்கம் இவைகளுடன் கூடிய பாண்டுவில் கோமூத்ரம், திரிபலை கஷாயம் இவைகளில் பாவனை செய்து சூர்யபுடமிட்டு கைரேகை பதியுமாறு சூக்ஷ்மமாக அரைக்கப்பட்ட இரும்புத்தூளை சேர்த்துச் செய்வதும், மற்ற பாண்டுகளில் லிங்கம் சேர்த்தோ சேர்க்காமலோ 10-15 புடங்கள் போட்டு ஜலத்தில் மிதக்கும் அள வில்பஸ்மமாக்கப்பட்ட லோஹத்தைச் சேர்த்துச்செய்வதும்யுக்த மெனச் சில விருத்த வைத்யர்களின் சம்பிரதாயம். இந்த யோகங் களில் சேர்க்கப்படும் அயமோ மண்டூரமோ, காந்தத்தால் இழுக் கப்படாத வரை பஸ்மமாக்கப்படவேண்டும் என்பது அவசிய மில்லை.

குணம்—அயஸ் சேர்ந்த யோகத்தைக் காட்டிலும் மண்டூரம் சேர்ந்த யோகம் ரக்தக்குறைவை நீக்குவதில் சற்று வீர்யம் குறைவானதாக இருந்தாலும் வீக்கம், கபதோஷங்கள், சூலம் இவைகளைப் போக்குவதில் குணமதிகம் தரவல்லது. நல்ல பசி ஜீர்ண சக்தி, ரத்த விருத்தி, ரத்த ஓட்டத்தை நன்கு தூண்டி நடுவில் தேங்கியுள்ள ரத்தத்தை அகற்றி கெட்ட ரத்தத்தை சுத்தப் படுத்துவது, கல்லீரல் மண்ணீரல் சோர்வை அகற்றி தாது பாகத்தை சீர் செய்வது, அக்னி மந்தத்தைப் போக்கி ஜீரணக் கருவிகளைப் பலப்படுத்துதல், ஆகார ரஸம் உடலில் சேராது அஜீர்ணமாவதால் ஏற்படும் காங்கை, வீக்கம், அல்லது உடல் காய்ந்துஉலர்ந்து போதல், வயிறு முன் தள்ளி மார்க்கூடு பின்னிப் போகுதல், உடல் சோர்வு முதலிய உபத்ரவங்களை நீக்குதல், சோதம், பாண்டு, கிருமி, உதரம், ஹிருதயரோகம், பகந்தரம் முதலிய நோய்களில் வியாதிகாரணமான தோஷச் சேர்க்கையை அகற்றி வியாதியைத் தணித்தல்—இவை இதன் சிறப்பான குணங்கள்.

அளவு-அனுபானம்—1-2 மாத்திரை காலை மாலை தேன் நெய் கலந்து அல்லது தயிர் தெளிவு கோமூத்ரம் இவைகளில் ஒன்றுடன் சாப்பிடலாம். ரக்தக்குறைவு பிரதானமாக இருப்பின் பாலுடனும், கிருமிரோகத்தில் வாய்விடங்கத்தின் சூர்ணமும் தேனும் சேர்த்தும், ஹிருதய ரோகத்தில் மருதம் பட்டை கஷாயத்துடன் பால் சேர்த்தும், பாண்டு ரோகத்தில் மூக்கரட்டை கஷாயத்துடனும், மண்ணீரல் கல்லீரல் வீக்கத்துடன் உடல் வீங்கி இருப்பின் புனர்னவாஷ்டககஷாயத்துடனும் சாப்பிடுவது நல்லது. குடல் பலக்குறைவுள்ளவர்கள் இதை ஆகாரத்திற்குப் பின் உபயோகிப்பது நல்லது.

பிருஹந்நவாயஸம்.

வயிற்றில் புண், உளைச்சல், இளகலாக மலம் கழிதல் முதலியவைகளுடன் பசியின்மை அதிக மிருந்தால், இந்த யோகத்திலுள்ள கோரைக்கிழங்கு, வாய்விடங்கம், கொடிவேலி வேர்ப்பட்டை இவைகளை யகற்றி இவைகளின் ஸ்தானத்தில் ஏலரிசி, ஜாதிக்காய் கிராம்பு இம் மூன்றும் சேர்த்து மருந்து தயாரிக்கவும். இந்த முறை **பிருஹந்நவாயஸம்** என்ற பெயரில் யோகரத்னகரத்

திலுள்ளது. இந்த யோகங்களை சூர்ணமாகவும் தயார் செய்து கொள்ளலாம்.

சில யோகங்களில் ஒன்பது திரவ்யங்களுக்கு சம அளவில் அயஸ்ஸிந்தூரம் 4½ பங்கும், மண்டூர பஸ்மம் 4½ பங்கும் சேர்த்தே தயாரிப்பதும் காணப்படுகின்றது. இவைகளில் வீர்யமதிகமாக்கவும் சில விசேஷ வியாதி நிலைகளில் அதிக பலனளிக்கவும், ரஸ ஸிந்தூரம் ஒருபங்கு சேர்த்து அரைத்து வைத்துக் கொள்வது சிலர் ஸம்பிரதாயம். இத்துடன் அவ்வப்போது சிருங்க பஸ்மம், கமடபஸ்மம், தான்வந்தரவடி, சுத்த வெள்ளை பாஷாணம் இவைகளை தேவைக்கேற்ப சேர்த்து உபயோகிப்பதும் நல்ல குணம் தரும்.

காளமேக நவாயஸம்

ஸித்தயோக ஸங்கிரஹத்திலுள்ளது

நவாயஸத்தின் ஒன்பது திரவ்யங்களும் வகைக்கு ஒரு பங்கு, அயஸ் ஸிந்தூரம் ஒன்பது பங்கு, நாட்டு நிலவேம்பு ஒன்பது பங்கு இவைகளை நாட்டு நில வேம்பின் கஷாய மிட்டு ஏழு நாள் அல்லது 21 நாள் அரைத்துக்கொள்ளவும் 8 யவ முதல் 1/8 தோலாவரை, தேன் நெய் சேர்த்து உபயோகிக்கலாம். கல்லீரலில் ஏற்படும் தோஷத்துடன் கூடிய பாண்டுவில் இது மிகச் சிறந்த பலனளிக்கின்றது. மேலும் வெகு நாட்பட்ட ஜ்வரத்தால் ஏற்படும் ரக்தக் குறைவு, பலக்குறைவு, பசியின்மை, மலக்கட்டு, இவைகளுடன் கல்லீரல் மண்ணீரல் வீக்கம், விட்டு விட்டு வரும் ஜ்வரம் இவைகளில் நல்ல குணமளிக்கின்றது.

மஹாமண்டல வெளியீடுகள்

1.	திரட்டு வாகடம்	0—6—0
2.	சித்தர் மூறை	0–12—0
3.	போபதேவசதகம். (தமிழ் மொழிபெயர்ப்பு)	1—0—0
4.	சிகித்ஸா கலிகா ,,	0–14—0
5.	பழைய வைத்ய சந்திரிகை பிரதிகள் ஒரு வருஷத்திய து	2—0—0

தபால் செலவு தனி. வி. பி. கிடையாது. முன்பணமும் அனுப்பவும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

27. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம், திருச்சி.

பால சிகித்ஸா—3

(வைத்ய விசாரத எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி.

பிறந்த உடன் முதல் மூன்று நாட்களில்

துணைக்குறிப்பு:

சிசு பிறந்த உடன் முதல் மூன்று நாட்களில் கவனிக்க வேண்டிய வைகளைப் பற்றிய ஆரோக்கிய கல்பத்துருமத்தின் மொழி பெயர்ப்பு சென்றமாதத்தில் வெளிவந்திருக்கிறது. மார்பகத்திலுள்ள ஸிரைகளின் துவாரம் விரிவடையாததை ஒட்டி மூன்ருவது அல்லது நான்காவது நாள் தாய்ப்பால் உண்டாகின்றதென்றும், அதுவரை விசேஷ முறையில் தயார் செய்த நெய்யையும் தேனையும் (சமமான அளவில்லாமல்) கொடுக்கு மாறு அங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அனேகமாக பால் சிகித்ஸை விஷயமான எல்லா நூல்களிலும் இவ்வாறே காணப்படுகின்றது. ஆனல் சரகர் முதல் நாளே தேனையும் நெய்யையும் மந்திரித்துக் கலந்து கொடுத்த பிறகு உடன் வலது ஸ்தனத்தை சிசுவிற்கு அளிக்கக் கொடுக்க வேண்டு மெனக் கூறுகிருர். இதற்கு இவ்விதமாகப் பொருள் கொள்ளலாம். சாதாரணமாக முதல் பிரஸவத்தில் தான் தாய்ப்பால் பெருக தாமதம் ஏற்படுகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட பிரஸவம் ஏற்பட்டவர்களுக்கு உடனேயே பால் பெருகும். சிலருக்கு தேகவாகை யனுசரித்து உடனேயே முதல் பிரசவத்திலேயே பால் பெருகலாம். இந்நிலையில் முதல் தினத்தி லிருந்தே தாய்ப்பால் குடிக்க சிசுவிற்கு ஸ்தனத்தை அளிப்பது உசி தமே. மேலும் ஸ்தனங்களில் பாலிருந்தாலும் பாலில்லாவிட்டாலும், சிசு விற்குப் பாலளிப்பதனுல், கர்ப்பாசயத்தில் ஒரு தூண்டுதல் ஏற்பட்டு கர்ப் பாசயம் சுருங்க ஆரம்பிக்கின்றது. இது பிரஸவித்தவளை சீக்ரமே ஆரோக்யமடையச் செய்கின்றது. ஸ்தனங்களிலும் ஒருவித உணர்ச்சி ஏற்பட்டு அங்குள்ள கிரந்திகள் ஊக்குவிக்கப்படுகின்றன. அதனுல் சீக்கி ரமே பால் பெருகத் துவங்குகிறது.

சிசுவிற்கு ஆகாரத்தேவை இருக்கிறதா இல்லையா, சிசுவிற்கு ஸ்தன த்தை உறிஞ்சி பால் சாப்பிட சக்தி இருக்கிறதா இல்லையா என்பதைப் பரீக்ஷிக்கவும் இது உதவும். அதனுல் முதல் நாளே சிசுவிற்கு பால் கொடுக்குமாறு சரகரின் உபதேசத்தைப் பின்பற்றுவது தான் நல்லது. பிறந்தவுடன் நல்ல மாற்றுள்ள தங்கத்தை தேன் நெய் விட்டுக் கல்லில்

இழைத்துக் கொடுப்பது மேதை, ஜீர்ணசக்தி, ஆயுள், பலம், நிறம் ஞாபக சக்தி இவைகளை அளிக்கவல்லது எனக் காசியபர் கூறுகிறார். சிசுக்களுக்கு மேதை ஆயுள் பலம் அளிக்கவல்ல பல முறைகள் காசியபஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளன. அவைகளைப் பின்னர் கவனிப்போம்.

பிறந்தது முதல் ஒரு வருஷம் வரை சிசுவிற்குத் தாய்ப்பால் ஒன்றே உத்தமமான உணவாகின்றது. அதை இயற்கையன்னை தாயிடம் சிசு பிறந்த உடனேயே பெருகும்படி அமைத்திருக்கிறாள். தாய்ப்பாலில் வளரும் சிசுவே நல்ல ஆரோக்கியத்துடன் வளருகின்றது. வேண்டிய பொழுதெல்லாம் சிசு தானாகவே தாயிடமிருந்து நேரே ஆகாரத்தைப் பெறுவதால், அதில் எவ்வித வெளிக்கெடுதலும் சேர முடியாது. பத்துமாதங்கள் வரை தாயின் உடலிலுள்ள சத்துக்களாலேயே வளர்ந்த சிசு வெளிவந்ததும் தனது சரீரத்திற் கொத்த எல்லாவிதத்திலும் தனக்கேற்ற தாய்ப்பால் ஒன்றையே உணவெனக் கொள்ளத்தக்க நிலையிலிருக்கிறது. தாய்ப்பாலில் சிசுவை வளர்ப்பது சௌகர்யமும் சிக்கனமுமாகும். சிசுவிற்கேற்ற வேறு ஆகாரங்களைத் தேடுவதிலும், அவைகளை அவ்வப்போது தயாரிப்பதிலும், அவை கெடாமல் பாதுகாப்பதிலும் தெரிந்தோ தெரியாமலோ கெட்ட உணவைக் கொடுப்பதால் பின் ஏற்படும் நோய்களிலிருந்து காப்பாற்றுவதிலும் தாயார் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும் சிரத்தையிலும் கவலையிலும் பாதி அளவு தனது ஆரோக்கியத்தில் அவள் செலவழித்தாளே யாகில் சிசுவை ஆரோக்கியத்துடன் வளர்க்க முடிகின்றது.

மேலும் தாய்ப்பால் ஒரு சிக்கனமான நல்ல உணவாகின்றது. இவ்வித கலப்பை செயற்கை முறையில் தயாரிப்பது அவ்வளவு சுலபமல்ல. இயற்கையாக சிசுவின் குடலில் எளிதில் ஜீர்ணமாகும் நிலையில் தாயாரின் உடலிலிருந்து வெப்பத்தோடு சிசுவின் குடலினுள் செல்லும் உணவிற்கு ஈடு வேறு எதுவுமில்லை. அத்துடன் தாய் தனது சரீரத்தை நல்ல ஆரோக்கியத்துடன் காப்பாற்றி வந்தால், சிசுவின் தேவைக்கேற்றவாறு சிறிது சிறிதாக தாய்ப்பாலின் அளவும் அதன் போஷகத் தன்மையும் அபிவிருத்தி அடைந்து கொண்டே வரும். அவ்விதம் தாய்ப்பாலை மாத்திரம் உணவாகக்கொண்ட சிசுக்கள் வியாதிகளுக்குள்ளாவதில்லை. அதனால் சிசு மரணம் குறைகின்றது. செயற்கை உணவருந்தும் சிசுக்களுக்கு ஏற்படும் வயிற்றுக் கோளாறுகள், கப உபத்ரவம், மலபந்தம் போன்றவை இந்த சிசுக்களுக்கு ஏற்படுவதில்லை. மற்றும் தாயிடம் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி சிசுவிற்கு பால் மூலம் அளிக்கப்படுவதால் நல்ல பாதுகாப்பு ஏற்பட

கின்றது. தாயின் அணைப்பிலே இருந்து உணவேற்கும் சிசுவிற்குத்தான் நல்லசுகமான பாதுகாப்பில் இருப்பதாக ஒரு உணர்வு ஏற்படுவதும் சகஜமே.

சிசுவிற்குப் பால் ஊட்டுவதால் தாய்க்கும் சில நன்மைகள் ஏற்படுகின்றன. முதலில் தனது ஆரோக்யத்தைப் பாதுகாப்பதில் அவளுக்கு அக்கரை ஏற்படுகின்றது. சிசு ஸ்தனத்தை உறிஞ்சும்போது தானே கர்ப்பப்பை சுருங்கி ஸ்திரப்படுகிறது. சிசுவிற்குப்பால் கொடுக்கும் தாய்க்கு கர்ப்பாசயத்தளர்ச்சி என்ற நோய் வருவதே இல்லை. அன்பிற்கும் அணைப்புக்கும் ஏங்கி நிற்கும் சிசுவுக்குப் பாதுகாப்பும் அளிப்பது மூலமாகத் தனக்கும் அதற்கும் என்றும் அறுபடாத அன்புத் தொடர்பை ஏற்படுத்த முடிகின்றது.

தேவையான போது, தேவையான அளவில் சாப்பிட்டுப் பிறகு தேவையில்லாவிட்டால் நிறுத்திவிடும் பழக்கம் சிசுவிற்கு ஏற்படுவதால், சிசுவின் குடல் தேவையறிந்து உணவளிப்பதிலுள்ள சிரமம் குறைகின்றது. செயற்கை முறையில் அதிகப்படியான உணவைக்கொடுப்பதும் குறைந்த அளவில் கொடுப்பதும் போன்ற சில கெடுதல்கள் இதில் கிடையாது.

தாய்ப்பால் குறைவதற்கும் வற்றுவதற்கும் முக்கியமான காரணங்கள்— அசட்டு நாகரிக மனப்பான்மையால் தாய்ப்பால் கொடுப்பதில் விருப்ப மின்மை, சிசுவிடமோ வேறு குடும்பச் சூழ் நிலையிலோ ஏற்படும் வெறுப்பு, கவலை, வருத்தம், கோபம் முதலிய மனோநிலைக்கோளாறுகள், சத்தில்லா உணவு, சரீரத்திலுள்ள சத்தைக்குறைக்கும் சிலமருந்துகளை உபயோகித்தல் அதிகப்பட்டினி, கடுமையான வேலை, அதிகப் புணர்ச்சி, சீக்ரம் மறுபடியும் கர்ப்பந்தரித்தல், ஸ்தனங்களை மிக இறுகக் கட்டுதல் இவை முதலியவையே.

மனச்சாந்தி சந்துஷ்டி குழந்தையிடம் அன்பு, அதைத் தனது தேகத்தினால் போஷித்து வளர்ப்பதில் ஆர்வமும் பெருமையும், தனது காம இச்சை முதலியவைகளை சிசுவிடம் காட்டும் வாத்சல்யம் முதலியவைகளால் போக்கு மாற்றித் தணித்து கொள்ளுதல், தனது ஆரோக்கியத்தில் கவனமும் ஆசையும், சத்தான ஆகாரங்கள் இவையெல்லாம் தாய்ப்பாலை சுரக்கச் செய்கின்றன.

பால் பாலைப்பெருக்கும். ஆதலால் தனியாகப் பாலையும், பாலுடன் சேர்ந்த அன்னம் கஞ்சி எளிதில் ஜீர்ணமாகும் பக்ஷண வகைகள் இவைகளை அதிகமாகச் சாப்பிடலாம்.

தாய்ப்பால் குன்றுதிருக்கத் தாய் கர்ப்பிணியாக இருக்கையிலேயே தனது ஆரோக்கியப் பாதுகாப்பில் நல்ல கவனம் செலுத்தவேண்டும்.

மேலும் ஸ்தன்யத்தைப்பற்றியும் அதன் தோஷங்களை அகற்றுவது பற்றியுமுள்ள விஷயங்களைப் பிற்பாடு யோசிப்போம்.

ஆரோக்கிய கல்பத்துருமம்.

நோயற்ற சிசுவிற்கு தினந்தோறும் குளிப்பாட்டுவது நல்லது. பாலில்லாத வரண்ட தேங்காயின் நீரை மேலுக்குத் தேய்த்துப் பிறகு குளிப்பாட்டவேண்டும். குளிப்பாட்டும் போது தலைக்குக் குளிர்ந்த நீரையும் உடலுக்கு ஆலந்தழை போட்டுக் காய்ச்சிய வென்னீரையும் உபயோகிக்கவும். கிணறு ஓடை குளம் இவை களிலிருந்து எடுக்கப்பட்ட ஜலத்தை குளிப்பாட்ட உபயோகிக்க லாம். விருக்ஷி இலை அல்லது சந்தனம் அகில் அல்லது தேவ தாரு, சிற்றுமுட்டி அல்லது அருகம்புல் வசம்பு கோஷ்டம் இவை களைப் போட்டுக் காய்ச்சப்பட்ட ஜலம் உடலிலிட்டு குளிப்பாட்ட நல்லது.

ஆருவது நாளிரவில் ரக்ஷையிட்டு பலி கொடுத்து சிசுவின் பந்துக்கள் அன்றிரவு முழுவதும் விழித்திருந்து சிசுவைப் பாது காக்கவேண்டும. (தொடரும்.)

செய்திகள்.

திருச்சி ஆயுர்வேத ஸபா:

25—7—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 4–15 மணிக்கு திருச்சி ஆயுர்வேத சபையின் மாதாந்தரக் கூட்டம் ஸபைத் தலைவர் ஸ்ரீ R. V. ராமய்யர் வைத்யவிசாரத அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வைத்யவிசாரத ஸ்ரீ K. S. விசுவனாத சர்மா (குளித்தலை) அவர்கள் 'ஆயுர்வேதத்தின் சிறப்பு' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்கள். ஆயுர்வேதத்தின் சிறப்பிற்கான வைத்யர்களின் கடமைபற்றி வைத்யர்களிடையே விசேஷ சர்ச்சை நடந்தது. கார்யதர்சி T. S. ஈசுவர அய்யர் முடிவில் வந்தனோப சாரம் கூறினார்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் :

18—7—54 அன்று மாலை 3–30 மணிக்கு திருச்சி ஆயுர் வேதிக் யூனியன் கட்டடத்தில் மஹாமண்டல உபதலைவர் ஸ்ரீ. V. ஸுப்ரமண்ய அய்யர் (ஸ்ரீரங்கம்) அவர்கள் தலைமையில் மஹாமண்டல நிர்வாஹஸமிதிக் கூட்டம் நடைபெற்றது. சமீபத் தில் மறுபடியும் கொணரப்பட்டுள்ள 20 சத விகிதத்திற்கு அதி கமாக சாராய அம்சம் உள்ள ஆஸவாரிஷ்டங்களுக்கு ரூ. 35 வீதம் ப்ரூப் ஸ்பிரிட்டிற்கு கலால் தீர்வை விதித்துள்ளதையும், வைத்யர்களுக்கு கஷாயம் முதலியவைகளைப் பாதுகாக்க உப யோகிக்கப்படும் ரெக்டிபைட் ஸ்பிரிட்டிற்கும் பங்கா கஞ்சா அபின் முதலியவைகளுக்கும் வைத்யர்களுக்கு அளிப்பதற்குக் கூட உள்ள சட்ட நிபந்தனைகளைப்பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. இது விஷயமாக சென்னை சர்க்காரின் சமபந்தப்பட்ட மந்திரி களையும் ரெவின்யூ போர்டு அதிகாரிகளையும் கண்டு பேசவும் மேலும் ஆவன செய்யவும், ஸ்ரீ. த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ சென்னை (மஹாமண்டலத்தலைவர்) ஸ்ரீ. கே. ராகவன், சென்னை (மஹாமண்டலக் கார்யதர்சி,) ஸ்ரீ. V. ஸுப்ரமண்ய அய்யர், ஸ்ரீரங் கம் (மஹாமண்டல உபதலைவர்) இம் மூவரைக்கொண்ட உப ஸமிதி ஒன்று நிறுவப்பட்டது.

விஜயவாடாவில் ஆந்திர ஆயுர்வேத கலாசாலை ஸ்தாபன விஷயமாகக் கூடியிருக்கும் ராஜ்ய ஆயுர்வேத ஆலோசனைக் கமிட்டிக்கு ஆயுர்வேதக்கல்லூரி பற்றிய கொள்கை நடைமுறை விஷயங்களில் ஆலோசனை கூற ஸ்ரீமான் V. B. நடராஜ சாஸ்த்ரீ, திருச்சி ஸ்ரீ. A. ராகவராவ், திருச்சி, ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ, திருச்சி— இவர்களடங்கிய உபஸமிதி நிறுவப்பட்டது.

சேலம் ஜில்லா கிளை சங்கத்திலிருந்து வந்திருக்கும் மாற்றுப் பதிவுமுறை விஷயமான கடிதத்தைப் பற்றி ஆலோசித்து அது விஷயமாக சர்க்காருடன் கடிதப்போக்குவரத்து செய்ய ஆலோ சிக்கப்பட்டது.

முடிவில் கார்யதர்சி தன்யவாதம் கூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *   * * *

திருச்சி நகராக்ஷி ஆயுர்வேத வைத்யசாலை :

திருச்சி நகராக்ஷி மன்றத்தினர் ஆயுர்வேத வைத்யசாலை ஒன்றை ஜூலை மாதத்தில் திருச்சி நகரில் ஆரம்பித்திருக்கின் றனர். ஸ்ரீ. ஜெ. வெங்கடராமன், L. I. M. அவர்கள் வைத்யராக

நியமிக்கப்பட்டுள்ளார். எல்லாவிதமான சிகித்சைகளும் ஆயுர்வேத முறையிலேயே நடத்தவேண்டிய வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. தாதி கம்பவுண்டர் போன்ற உதவியாளர்களும் அளிக்கப்பட்டுள்ளனர். திருச்சி நகராக்ஷி மன்றத்தின் இப்பணி ஆயுர்வேத உலகிற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. நாம் இதை முழுமனதுடன் வரவேற்கிறோம். மேலும் நகரத்தில் பல பிரதேசங்களிலும் இவ்வித ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளை ஆரம்பித்து ஆயுர்வேத மூலமாக பொதுஜன சேவை செய்ய நல்ல வசதியை நகராக்ஷி மன்றத்தார் செய்யவேண்டுமென்பதே நமது கோரிக்கையாகும்.

* *

ஸௌராஷ்டிரத்தில் புதிய ஆயுர்வேத கலாசாலை:

ஸௌராஷ்டிரத்திலுள்ள பாவ நகரில் (பாவநகர் ராஜ்யத்தின் தலை நகரில்) ஜூலை மாதம் 2உ அன்று புதிய ஆயுர்வேத கலாசாலையை ஸௌராஷ்டிர ராஜ்யத்தின் ராஜப்ரமுகர் மஹாராஜ ஸ்ரீ கிருஷ்ணகுமாரஸிம்ஹஜீ திறந்து வைத்தார். இந்த வித்யாலயத்தில் 3½ வருஷங்கள் படிப்பு பயிற்சி அளிக்க ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது. இது ஒரு தனிப்பட்ட பொதுஜன தர்ம நிதியிலிருந்து நடத்தப்படுகின்றது. இதற்கு சர்க்கார் முதல் வருஷம் இருபதினாயிரம் ரூபாய்களும், பிற்பாடு பிரதிவருஷமும் பதினாயிரமும் மான்யமாக அளிக்கும்.

முன்னிருந்த பாவநகர் ராஜ்யத்தில் ஆயுர்வேத முன்னேற்றத்திற்காக முன் ஒதுக்கப்பட்டிருந்த பதினைந்து லக்ஷ ரூபாய்களில் செலவானது போக மீதி உள்ளதை இதற்கு மூலதனமாக அளிக்க முன்வந்துள்ளார்கள்.

* *

ஆந்திர தேசத்தில் ஆயுர்வேத கலாசாலை:

ஆந்திர ராஜ்ய சர்க்கார், ஆயுர்வேதத்திற்கு அளிக்கப்படவேண்டிய ஸ்தானம் வசதி முதலியவைகளைப்பற்றி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகளை அளிக்குமாறு டாக்டர். ஏ. லக்ஷ்மீபதி அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு கமிட்டியை நிறுவியிருக்கிறது. கூடிய சீக்ரம் அக்கமிட்டி தமது சிபார்சுகளைச் சர்க்காருக்கு அனுப்பும். ஆந்திர தேசமாவது ஆயுர்வேத முன்னேற்றத்திற்கான சரியான பாதையில் ஆயுர்வேத கலாசாலை நிறுவுவதையும், மற்ற சம்பந்தப்பட்ட காரியங்களையும் செய்யும் என்று நாம் எதிர்பார்ப்பது வீண் போகாதென நம்புகிறோம்.

AYURVEDIC INJECTIONS

MARTAND PHARMACEUTICALS

(RESEARCH INSTITUTE OF INDIAN MEDICINES)

is the most equipped laboratory of India in which the intelligent research scholars daily carry out researchs under the guidance of our celebrated Director, the first inventor of

AYURVEDIC INJECTIONS.

It is due to the precautions, checks and hard labour we take in the preparation of our Ayurvedic Injections that they are so efficacious, act like magic and the cure is permanent. All literature regarding the research and the allied can be had free from the undersigned.

WANTED AGENTS AND SOLE-AGENTS THROUGHOUT THE ANDHRA AND MADRAS PROVINCE.

N. B. *All correspondence in English.*

MARTAND PHARMACEUTICALS,
BARAUT. U. P.
(S. S. Rly.)